**சார்பு நீதிமன்றம், தேனி**

**முன்னிலை: திருமதி.R.கீதா, B.A., B.L.,**

**சார்பு நீதிபதி, தேனி**

**2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேல்முறையீட்டு வழக்கு எண். 41/2022**

**மற்றும்**

**இ.ம.எண். 2/2024**

**உள்**

**மேல்முறையீட்டு வழக்கு எண். 41/2022**

**(CNR No: TNTH 03 – 000945 – 2019)**

**உள்**

**அசல் வழக்கு எண். 178/2011**

பேபிராஜம்மாள் .... மேல்முறையீட்டாளர் / வாதி

**// எதிர் //**

1. சந்திரா
2. மகேஷ்வரி
3. பாரதி
4. நாகராஜ்
5. விஜயா
6. வட்டாட்சியர் அவர்கள்,
   ஆண்டிபட்டி தாலுகா,
   தேனி மாவட்டம். .... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

தாவா மேல்முறையீடு ஆண்டிபட்டி, கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.178/2011 வழக்கில் 16.08.2019 ம் தேதி பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் மேல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் தரப்பினர்கள் தகுநிலை :–**

**<u>அசல் வழக்கு எண். 178/2011</u>**

பேபிராஜம்மாள் .... வாதி

**// எதிர் //**

1. சந்திரா
2. மகேஷ்வரி
3. பாரதி
4. நாகராஜ்
5. விஜயா *
6. வட்டாட்சியர் அவர்கள்,
   ஆண்டிபட்டி தாலுகா,
   தேனி மாவட்டம். .... பிரதிவாதிகள்

*(Amended as per office order 54/2026, dated 09.06.2026)

இம்மேல்முறையீடானது இறுதி விசாரணைக்காக 22.06.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்தபோது, மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. அம்சமணி, B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. அன்னகாமாட்சி, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 4 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கோகுலக்கண்ணன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, விசாரணை நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ள சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## தீர்ப்புரை

இம்மேல்முறையீடானது கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆண்டிபட்டி அசல் வழக்கு எண்.178/2011ல் கடந்த 16.08.2019–ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டியும், இம்மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டியும் மேற்கண்ட அசல் வழக்கு எண்.178/2011ல் தோல்வியுற்ற வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 41 விதி 1 மற்றும் பிரிவு 96 –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட அசல் வழக்கானது வாதி மற்றும் 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள், லட்சுமண நாயுடுவின் மகன் இறந்துபோன ராமசாமியின் சட்டப்பூர்வ வாரிசுகள் என விளம்புகை செய்யக் கோரியும், மேலும் 6ம் பிரதிவாதி அது தொடர்பான சட்டப்பூர்வ வாரிசுச் சான்றிதழை வழங்குமாறு உத்தரவிடக் கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:**

வாதியின் கணவரான ராமசாமி, தேனியில் உள்ள தமிழ்நாடு மின்சாரத்துறையில் ஊழியராகப் பணியாற்றி, 24.03.2008ம் தேதியன்று உயில் எழுதாமல் இறந்துவிட்டார் என்றும், வாதி, இறந்துபோன ராமசாமியின் முதல் மனைவி என்றும், 1 முதல் 3 பிரதிவாதிகள் அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் என்றும், மேற்படி ராமசாமி, பார்வதி என்ற பெண்ணுடன் வாழ்ந்து வந்து அவர் மூலமாக இந்த 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் பிறந்தனர் என்றும், பார்வதி எவ்வித ஆவணம் எழுதி

வைக்காமல் 4 மற்றும் 5ம் பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் என்றும், மேலும், வாதியும், 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளும் இறந்துபோன ராமசாமியின் சட்டப்பூர்வ வாரிசுகள் என்றும், அவர் இறக்கும் வரை ஓய்வூதியம் பெற்று வந்தார் என்றும், மேலும் வாதி, இறந்துபோன ராமசாமியின் மனைவி என்பதால் அந்த ஓய்வூதியத்தைப் பெற உரிமையுடையவர் என்றும், வாதி சம்பந்தப்பட்ட அலுவலகத்தை அணுகியபோது, அவர்கள் ராமசாமியின் இறப்புச் சான்றிதழையும் அவரது சட்டப்பூர்வ வாரிசுச் சான்றிதழையும் சமர்ப்பிக்குமாறு வற்புறுத்தினர் என்றும், அதன்பின், வாதி சட்டப்பூர்வ சான்றிதழ் வழங்குமாறு கோரி 21.02.2011ம் தேதியிட்ட மனுவை 6ம் பிரதிவாதியிடம் சமர்ப்பித்தார் என்றும், ஆனால் இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், எனவே, வாதியும், 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளும் இறந்துபோன ராமசாமியின் சட்டப்பூர்வ வாரிசுகள் என அறிவிக்கவும், வாதியையும், 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளையும் இறந்துபோன ராமசாமியின் சட்டப்பூர்வ வாரிசுகளாகக் குறிப்பிட்டு சட்டப்பூர்வ வாரிசுச் சான்றிதழை வழங்குமாறு 6ம் பிரதிவாதிக்கு உத்தரவிடவும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் 4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

இந்த பிரதிவாதி, வழக்குரையில் உள்ள சங்கதிகளை மறுத்த பின்னர், 4 மற்றும் 5ம் பிரதிவாதிகளின் தந்தையான இறந்துபோன ராமசாமிக்கும் வாதிக்கும் எந்த வகையிலும் தொடர்பு இல்லை என்றும், ராமசாமி, 4 மற்றும் 5ம் பிரதிவாதிகளின் தாயான பார்வதியை மட்டுமே

மணந்திருந்தார் என்றும், இறந்துபோன ராமசாமியின் சட்டப்பூர்வ வாரிசுகளாக வேறு யாரும் உயிருடன் இல்லை என்றும், உண்மைகளை மறைத்தே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுடன், வாதி தூய கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும், இந்த பிரதிவாதியின் தந்தை, ஓய்வூதியப் புத்தகம், குடும்ப அட்டை மற்றும் பிற அதிகாரப்பூர்வ ஆவணங்களில் பார்வதியின் பெயரைத் தனது வாரிசுதாரராகக் குறிப்பிட்டிருந்தார் என்றும், வாதி, தனக்கும் ராமசாமிக்கும் இடையே திருமணம் நடந்ததாகக் கூறப்படும் நிகழ்வை வெளிப்படுத்தாமல் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும், அந்தத் திருமணம் எங்கு நடைபெற்றது என்பதையும் அவர் குறிப்பிடத் தவறிவிட்டார் என்றும், வாதி, தான் ராமசாமியின் மனைவி என்பதைக் காட்டுவதற்கு எந்த ஆவணத்தையும் சமர்ப்பிக்கத் தவறிவிட்டார் என்றும், 4 மற்றும் 5ம் பிரதிவாதிகளின் தாயாரான பார்வதி மட்டுமே, இறந்துபோன ராமசாமியின் சட்டப்படியான மனைவி என்றும், வாதி, இந்தப் பிரதிவாதிகளின் சொத்துக்களை மோசடி செய்யும் தீய எண்ணத்துடன் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், 4 மற்றும் 5ம் பிரதிவாதிகளால் பெறப்பட்ட ஓய்வூதியம் மற்றும் அந்தச் சொத்துக்களில் உள்ள பங்குகளைப் பெறும் ஒரே நோக்கத்துடன், வாதி நேர்மையற்ற முறையில் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த வழக்கில் கோரப்பட்ட நிவாரணத்தைப் பெற வாதிக்கு உரிமை இல்லை, மேலும் இந்த வழக்கு செலவுகளுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்பதாகும்.

5. விசாரணை நீதிமன்றத்தால் இந்த வழக்கினை உரிய முறையில் தீர்மானிக்க ஏதுவாக 12.06.2018 ம் தேதியன்று கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| **1.** | **வாதி இறந்துபோன ராமசாமியின் முதல் மனைவி என்பது உண்மையா?** |
| **2.** | **24.01.2010 ம் தேதி இறந்துபோன ராமசாமிக்கு வாதியும் 1 முதல் 5 பிரதிவாதிகளும் வாரிசுதாரர்கள் என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?** |
| **3.** | **6 ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவது சரியா?** |
| **4.** | **வாதிக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?** |

5 (a). On the date of Judgment for the sake of convenience the above framed issues were recasted and rearranged before the trial Court:

| | |
|---|---|
| 1. | Whether the Plaintiff is the first wife of deceased Ramasamy? |
| 2. | Whether the Plaintiff is entitled to the relief of Declaration that the Plaintiff and the Defendants 1 to 5 are the legal heirs of deceased Ramasamy? |
| 3. | Whether the Plaintiff is entitled to the relief of Mandatory Injunction against the 6th Defendant as prayed for? |
| 4. | To what other relief? |

6. விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில்

பி.வா.சா.1 முதல் பி.வா.சா.3 வரை விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7. இரு தரப்பு வாதுரைகள், சாட்சிய சான்றாவணங்கள், வாத உரைகள் பரிசீலனை செய்த விசாரணை நீதிமன்றம் கடந்த 16.08.2019 ம் தேதி அசல் வழக்கினை தள்ளுபடி செய்து தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது.

**8. கனம் ஆண்டிபட்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண். 178/2011 ல் கடந்த 16.08.2019 ம் தேதி பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் குறைவுற்ற வாதி இம்மேல்முறையீட்டை கீழ்கண்ட காரணங்களுக்காக தாக்கல் செய்துள்ளார்:- அவை:**

i) விசாரணை நீதிமன்றம் தாவா வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ளள தஸ்தாவேசுகள் மற்றும் சாட்சியத்தை சட்ட ரீதியாக பரீசிலிக்க தவறி வாதிக்கு எதிராக வாதியின் வழக்கை தள்ளுபடி செய்திருப்பது சட்டப்படி சரியல்ல என்றும், வாதி தாவா வழக்கில் வாதியும் 1 முதல் 5 பிரதிவாதிகள் இறந்துபோன லேட்.ராமசாமி என்பவரின் வாரிசுகள் என விளம்புகைக்காக உண்மையின் அடிப்படையில் நியாயமான முறையில் வழக்கு தாக்கல் செய்திருப்பதை விசாரணை நீதிமன்றம் பரிசீலிக்க தவறி, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்திருப்பது சட்டப்படி சரியல்ல என்றும், வாதி இறந்துபோன லேட். ராமசாமி என்பவரின் மனைவி என்பதை நிருபணம் செய்ய வாதி தரப்பு ஆவணமாக வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்களை விசாரணை

நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள மறுத்து இருப்பது சட்டப்படி சரியல்ல என்றும், வாதி விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள, வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.5 வரையில் உள்ள ஆவணங்களை முறையாக பரிசீலிக்காமல் வாதியின் வழக்கை தள்ளுபடி செய்திப்பது சட்டப்படி சரியல்ல என்றும், விசாரணை நீதிமன்றம் 4, 5ம் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள, பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பார்வதி என்பவரை மனைவியாக குறிப்பிடப்படவில்லை என்பதையும், நாமினியாக குறிப்பிட்டுள்ளதையும் முறையாக பரிசீலிக்கவில்லை என்றும்,

ii) விசாரணை நீதிமன்றம் 4, 5ம் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.4, பி.வா.சா.ஆ.5 ஆவணங்கள் மேற்படியார்கள் லேட்.ராமசாமியின் வாரிசுகள் என தீர்மானித்த நிலையில் வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 ஆவணத்தை ஏற்க மறுத்துள்ளது சட்டபடி சரியல்ல என்றும், விசாரணை நீதிமன்றம் அசல் வழகை சட்ட ரீதியாகவும், உபய தரப்பினர்கள் கொடுத்துள்ள வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கை செய்யாமல் வழக்கை தள்ளுபடி செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், விசாரணை நீதிமன்றம் இறந்துபோன லேட். ராமசாமி என்வருக்கு வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகள் வாரிசுகள் என விளம்புகை செய்யாமல், அசல் வழக்கை தள்ளுபடி செய்திருப்பது சட்டப்படி சரியல்ல என்றும், விசாரணை நீதிமன்றம், ஏற்கனவே 6ம் பிரதிவாதி பிராதில் கோரியபடி, வாரிசு சான்று வழங்கி, அதனடிப்படையில் வாதி லேட். ராமசாமியின் இறப்பின் பலனை அடைந்து வருகிறார் என்று சாட்சிகளின் வாக்குமூலத்தை பரிசீலனை செய்யாமல் தாவா வழக்கை தள்ளுபடி

செய்திருப்பது சட்டப்படி சரியல்ல என்றும், எனவே, விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கு எண்.178/11–ல் வாதிக்கு எதிராக கடந்த 16.08.2019 ம் தேதி வழங்கிய தீர்ப்புரையை மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்து மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்துள்ள இம்மேல்முறையீட்டை தொகையுடன் அனுமதிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**9. இம்மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளரான வாதி தரப்பில் மனுவில் கண்ட தஸ்தாவேசுகளை ஏற்று மேல்முறையீட்டாளர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து, தாவா மேல்முறையீட்டு வழக்கை நடத்த உத்தரவிட வேண்டி இடைநிலை மனு எண்.2/2024 யை உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 41 விதி 27 (b) மற்றும் பிரிவு 151 – ன்கீழ் தாக்கல் செய்துள்ளார்.**

**<u>a) இ.ம.எண்.2/2024 மனுவின் சுருக்கம் :</u>**

i) மனுதாரர் இம்மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளர் என்றும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் இம்மனுதாரரின் மக்கள் என்றும், 4, 5 எதிர்மனுதாரர்கள் இம்மனுதாரரின் கணவர் சேர்த்து வைத்திருந்த பார்வதி என்பவரின் மக்கள் ஆவார்கள் என்றும், இம்மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தில் அசல் வழக்கு, இறந்துபோன இம்மனுதாரரது கணவர் ராமசாமிக்கு இம்மனுதாரரும் 1 முதல் 5 வரை உள்ள எதிர்மனுதாரர்களும் வாரீசு என விளம்புகை செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்திருந்ததாகவும், மேற்கண்ட வழக்கு முழு விசாரணைக்குபின்பு கடந்த 16.08.2019 ம் தேதி தள்ளுபடி ஆகிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் இம்மனுதாரர் தாக்கல் செய்திருந்த ஆவணங்களை முழுமையாக பரிசீலனை செய்யாமல், தாவா அசல் வழக்கை

ஒட்டுமொத்தமாக தள்ளுபடி செய்துவிட்டது என்றும், மேலும் தாவா அசல் வழக்கில், இறந்துபோன இம்மனுதாரரது கணவர் ராமசாமி என்பவரின் மனைவி என்பதற்கான போதுமான ஆதாரங்களை இம்மனுதாரர் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனடிப்படையில் மேற்படி ராமசாமிக்கும், இம்மனுதாரருக்கும் இல்லற வாழ்வில் பிறந்த 1 முதல் 3 எதிர்மனுதாரர்களின் மேற்படியார்களின் வாரீசு இல்லை என வழக்கை தள்ளுபடி செய்திருப்பது மிகுந்த மன உளைச்சலையும், வருத்தத்தையும் இம்மனுதாரருக்கு உண்டாக்குகிறது என்றும்,

ii) மேலும், இம்மனுதாரரது கணவர் சேர்த்து வைத்திருந்த பார்வதி என்பவருக்கு பிறந்த 4, 5 எதிர்மனுதாரர்களையும் வாரிசு இல்லை என ஒட்டுமொத்தமாக வழக்கை தள்ளுபடி செய்திருப்பது விசாரனை நீதிமன்றம் வழக்கை நன்கு பரிசீலிக்கவில்லை என்பது தெனிவுப்படுத்தும் என்றும், விசாரணை நீதிமன்றம் இம்மனுதாரரையும் அவரது மக்களையும் இறந்துபோன ராமசாமியின் வாரிசு என்பதை நிரூபிக்கவில்லை என்று கூறியதன் அடிப்படையில் அதற்கான ஆவணங்களை தேடிப்பார்த்ததில் தற்சமயம் இம்மனுதாரர் தேசிய ஊரக வளர்ச்சித்துறை தேனி மாவட்டத்தில் கடந்த 21.07.2010ம் தேதி உறுப்பினராக சேர்ந்ததற்கு ஒக்கரைப்பட்டி ஊராட்சித்தலைவர் வழங்கிய இலவச அட்டை தாக்கல் செய்வதாகவும், மேலும், இம்மனுதாரர் 1991ம் ஆண்டு பஞ்சாயத்தில் பெட்டிக்கடை நடத்தியதற்கான வரி ரசீது தாக்கல் செய்வதாகவும், மேலும், வாக்காளர் அடையாள அட்டை வழங்க 17.08.1996ம் தேதி ஒக்கரைப்பட்டி பள்ளியில் ஆஜராக கொடுத்த வாக்காளர் பதிவு அதிகாரியின் நோட்டீஸை தாக்கல் செய்வதாகவும்,

மேலும், இம்மனுதாரர் இறந்துபோன இம்மனுதாரரது கணவருக்கு கிடைக்கவேண்டிய பென்சன் தொகையை அன்று முதல் இன்று வரையில் பெற்றுவருகிறார் என்பதற்கான வங்கி பாஸ்புத்தகம் தாக்கல் செய்வதாகவும், இம்மனுதாரர் மேற்கண்ட ஆவணங்களை உரிய நேரத்தில் தேடி எடுத்து விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டதாகவும்,

iii) மேற்கண்ட ஆவணங்கள் தற்சமயம் தான் இம்மனுதாரருக்கு கிடைத்ததாகவும், ஆதலால் மேற்கண்ட ஆவணங்களை தாவா மேல்முறையீட்டில் ஏற்று இம்மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து, வழக்கை மேல்நடத்த வேண்டும் என்றும், இல்லாது போனால் இம்மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் உண்டாகும் என்றும், வழக்கின் உண்மை நிலவரமும் இந்நீதிமன்றத்திற்கு தெரியாமல் போய்விடும் என்றும், எனவே, இம்மனுவில் கண்ட தஸ்தாவேசுகளை ஏற்று மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து, தாவா மேல்முறையீடு வழக்கை நடத்த உத்தரவிடவேண்டியது அவசியமாயும் நியாயமாயும் உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

b) எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**10. இம்மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் யாதெனில் :**

| | |
|---|---|
| **1.** | **மனுதாரர் / மேல்முறையீட்டாளர் தரப்பிலான இடைநிலை மனு எண்.2/2024 மனுவில் கண்ட ஆவணங்களை இம்மேல்முறையீட்டில் கூடுதல் ஆவணங்களாக ஏற்கலகுமா?** |
| **2.** | **விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் குறுக்கீடு செய்ய, ரத்து செய்ய முகாந்திரம் உள்ளதா?** |
| **3.** | **விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நிலை நிற்கத்தக்கதா?** |
| **4.** | **மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த இடைநிலை மனு எண்.2/2024 மனு அனுமதிக்கத்தக்கதா?** |
| **5.** | **இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?** |

11. விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்கள் எவ்வாறு அழைக்கபட்டனரோ அவ்வாறே இம்மேல்முறையீட்டிலும் இதன்கீழ் அழைக்கப்படுவர்.

12. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

**<u>பிரச்சனை எண். 1 கான தீர்வு :</u>**

13. மனுதாரர் தரப்பில் கனம் விசாரணை நீதிமன்றம் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் இறந்துபோன ராமசாமியின் வாரிசுதாரர் என்பதற்கு போதுமான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என தீர்மானித்து மனுதாரர் / மேல்முறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.178/2011 தள்ளுபடி செய்து தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மனுவில் கண்ட ஆவணங்கள் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் வாரிசுதாரர்கள்

என்பதற்கான ஆவணங்கள் என்றும், அவை விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கு நிலுவையின் போது அவை கிடைக்கவில்லை என்றும், தற்போது தான் கிடைத்தன என்றும், மனுவில் கண்ட ஆவணங்கள் அசல் வழக்கினை தீர்மானிப்பதற்கான ஆவணங்கள் என்றும் கூறியுள்ளனர்.

14. மேல்முறையீட்டில் எத்தனை சூழ்நிலையில் கூடுதல் ஆவணங்கள் ஏற்பட வேண்டும் என உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 41 விதி 27 – ன் கீழ் கூறப்பட்டுள்ளது அவை:

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 41 விதி 27– ன் கீழ் கூறுவது யாதெனில்

**Production of Additional Evidence in Appellant Court:-**

(1) the Parties to an appeal shall not be entitled to produce additional evidence,whether oral or documentary, in the Appellate Court But if

(a) the Court from whose decree the appeal is preferred has refused to admit evidence which ought to have been admitted, or

(aa) the party seeking to produce additional evidence, establishes that notwithstanding the exercise of due diligence, such evience was not within his knowledge or could not, after the exercise of due diligence, be produced by him at the time when the decree appealed against was passed, or)

(b) the Appellate Court requires any document to be produced or any witness to be examined to enable it to pronounce judgment, or for any other substantial cause. the Appellate Court may allow such evidence or document to be produced, or witness to be examined.

(2) Whenever additional evidence is allowed to the produced, by an Appellate Court, the Court shall record the reason for its admission.

15. மனுதாரர் மனுவில் கூறப்பட்டுள்ள ஆவணங்களான 1) 27.02.1991ம் தேதிய பேபி ராஜம்மாள் பெயரிலான பெட்டிக்கடை உரிமம் ரசீது, 2) 17.08.1996ம் தேதிய வாக்காளர் பதிவு அதிகாரி நோட்டீஸ், 3)தேசிய ஊரக வேலைவாய்ப்பு அட்டை, 4) பேபி ராஜம்மாள் பென்சன் பெறுவதற்கான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பாஸ் புத்தகம், 5) பேபி ராஜம்மாள் தன் கணவர் ராமசாமி பெயரில் செலுத்திய வீட்டு வரி ரசீது, 6) 1ம் எதிர்மனுதாரர் சந்திரா ஆதார் அட்டை சான்றிட்ட நகல், 7) 2ம் எதிர்மனுதாரர் மகேஸ்வரி பள்ளி மாற்றுச் சான்றிதழ் ஆகியவைகளை தாக்கல் செய்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் இறந்துபோன ராமசாமியின் வாரிசுதாரர் விபரத்திற்கு ஏற்புடைய ஆவணங்களா இல்லையா என்பதை இம்மனுவில் பரிசீலிக்கலாகாது. மேல்முறையீட்டாளர் / வாதி இம்மேல்முறையீட்டில் அவர் வழக்கினை நிலைநிறுத்துவதற்காக வாய்ப்பு அளிக்கும் பொருட்டு இம்மேல்முறையீட்டினை தீர்மானிக்க மனுவில் கண்ட ஆவணங்கள் தேவையான ஆவணங்கள் என்பதாலும், மனுவில் கண்ட ஆவணங்கள் கூடுதல் சான்றாவணமாக ஏற்க இந்நீதிமன்றம் தீர்மானித்து அவ்வாறே பிரச்சனை எண்.1 க்கு தீர்வு காண்கிறது.

<u>பிரச்சனை எண்கள். 2 மற்றும் 3 கான தீர்வு:</u>

16. இறந்துபோன ராமசாமி த/பெ. லட்சுமண நாயுடு என்பவருக்கு வாதி முதல் மனைவி என்றும், ராமசாமி மற்றும் வாதிக்கு பிறந்தவர்கள் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றும், ராமசாமியின் 2ம்

மனைவி பார்வதி என்பவர் மூலம் பிறந்த குழந்தைகள் தான் 4, 5ம் பிரதிவாதிகள் என்றும், எனவே, இறந்துபோன ராமசாமிக்கு இந்தநிர் வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகள் சட்டபூர்வ வாரிசுதாரர்கள் என்று விளம்புகை பரிகாரம் வேண்டி வழக்கிட்டுள்ளார். 4, 5ம் பிரதிவாதிகள் தரப்பில் இறந்துபோன ராமசாமி த/பெ. லட்சுமண நாயுடு என்பவருக்கு 4, 5ம் பிரதிவாதிகளின் தாயாரான பார்வதி மட்டும் மனைவி என்றும், இறந்துபோன ராமசாமிக்கு வாதி மனைவி அல்ல, 1 முதல் 3 பிரதிவாதிகள் வாரிசுகள் அல்ல என்றும் எதிர்வழக்காடியுள்ளனர்.

17. விசாரணை நீதிமன்றம் இறந்துபோன ராமசாமியின் மனைவி இந்தநிர் வாதி என்பதற்கும் 1 முதல் 3 பிரதிவாதிகள் பிள்ளைகள் என்பதற்கும் தகுந்த சாட்சிய சான்றாவணம் ஏதும் வாதி முன்னிடவில்லை என தீர்மானித்து, வாதி தரப்பிலான அசல் வழக்கினை தள்ளுபடி செய்து தீர்ப்புரை பிறப்பித்துள்ளது.

18. மேல்முறையீட்டாளரான வாதி தரப்பில் இம்மேல்முறையீட்டில் இறந்துபோன ராமசாமியின் மனைவி தான் வாதி என்பதற்கு வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 தாக்கல் செய்துள்ளதாகவும், ஆனால், விசாரணை நீதிமன்றம் அதனை ஏற்காது, 4, 5ம் பிரதிவாதிகள் தரப்பு பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 சான்றாவணமாக ஏற்று, இறந்துபோன ராமசாமியின் மனைவி பார்வதி என்றும், 4 5 பிரதிவாதிகள் பிள்ளைகள் என்று தீர்மானித்து வழக்கினை தள்ளுபடி செய்துள்ளது தவறானது என வாதிடப்பட்டது.

19. விசாரணை நீதிமன்றத்தில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆதார் அட்டை, வாக்காளர்

அடையாள அட்டை மற்றும் மேல்முறையீட்டில் கூடுதல் ஆவணங்களாக மேல்முறையீட்டு ஆவணம் 1 முதல் 6 ஆவணங்கள் யாவும் இறந்துபோன ராமசாமியின் வாரிசுகள் என்பதற்கு தகுதி வாய்ந்த சான்றுகள் அல்ல. மேலும், மே.மு.சா.ஆ.7 மகேஸ்வரி பள்ளி மாற்றுச் சான்றிதழில் அவர் S.மகேஸ்வரி என கையொப்பம் செய்துள்ளார். மேலும், மேற்படி ஆவணம் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட 2016ம் வருடம் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி மே.மு.சா.ஆ.7 வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டதா என சந்தேகம் எழுகின்றது.

20. மேலும், இம்மேல்முறையீட்டு மேல்முறையீட்டாளரான வாதி தரப்பில் வாரிசு சான்று அடிப்படையில் வாதி இறந்துபோன ராமசாமி பணிக்கொடைகளை பெற்றுள்ளார் என பி.வா.சா.1 ஒப்புக்கொண்டுள்ளதை கவனிக்கவில்லை என வாதிடப்பட்டுள்ளது. அசல் வழக்கு தாக்கல் செய்யும் முன்னர் வாரிசு சான்று வேண்டி வா.சா.ஆ.2 மூலம் 6ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியதற்கு 6ம் பிரதிவாதி தரப்பில் உரிய முறையில் வாரிசு சான்று வேண்டி மனு செய்து பெறுமாறு அறிவுறுத்தியதன் பேரிலேயே வாதி தரப்பில் இறந்துபோன ராமசாமியின் வாரிசுதாரர் விளம்புகை பரிகாரம் வேண்டி இவ்வழக்கிட்டுள்ளார். பின்னர் அவர் எதனடிப்படையில் வாரிசு சான்றிதழ் பெற்றார். இறந்துபோன ராமசாமி பணிக்கொடை வாதி பெற்றுக்கொண்டுள்ளார் என்பதற்காக மட்டும் வாதி இறந்துபோன ராமசாமியின் மனைவி என கருத முடியாது.

21. மேலும் இறந்துபோன ராமசாமிக்கும் வாதிக்கும் இடையே திருமணம் நடந்தது என்பதற்கும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 3 பிரதிவாதிகள் பிள்ளைகள் என்பதற்கும், வாதி தரப்பில் தகுந்த

சாட்சிய சான்றாவணம் ஏதும் முன்னிடவில்லை. வாதி தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் முன்னிடப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் இம்மேல்முறையீட்டில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் சான்றாவணங்கள் யாவும் இறந்துபோன ராமசாமியின் மனைவி வாதி என்பதற்கோ 1 முதல் 3 பிள்ளைகள் என்பதற்கோ தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் அல்ல.

22. மேலும், வாதி தரப்பில் இறந்துபோன ராமசாமி இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.1 வாதி வசமுள்ளது என்பதால் மட்டும் வாதி வாரிசாக கருத முடியாது. ஏனெனில் 24.03.2008ம் தேதி ராமசாமி இறந்துபோனதாக சொல்லப்பட்டு, குற்றவியல் நீதிமன்ற நடுவர் முன்பாக குற்றவியல் பல்வகை மனு மூலம் பெறப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் இந்தநிர் 4, 5 பிரதிவாதிகள் தரப்பினர்கள் அல்ல என்பதாலும், வா.சா.ஆ.1 வாதி வசம் உள்ளதாலேயோ, ராமசாமியின் வாரிசு வாதி என கருத முடியாது.

23. இறந்துபோன ராமசாமி த/பெ. லட்சுமண நாயுடு மனைவி என்பதற்கு வாதி தரப்பில் தகுந்த தெளிவான சட்டப்படி ஏற்கும்படியான சாட்சிய சான்றாவணங்கள் ஏதும் முன்னிடவில்லை. எனவே, இறந்துபோன ராமசாமி த/பெ. லட்சுமண நாயுடு மனைவி வாதி என்பதற்கும், 1 முதல் 3 பிரதிவாதிகள் பிள்ளை என்பதற்கும், வாதி தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் ஏதும் முன்னிடவில்லை என தீர்மானித்து, விசாரணை நீதிமன்றம் வாதி வழக்கினை தள்ளுபடி செய்து தீர்மானித்தது சரியானது என்றும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் குறுக்கீடு செய்ய, ரத்து செய்ய எவ்வித முகாந்திரமும்

இல்லை என்றும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நிலைநிற்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் பிரச்சனை எண்கள்.2 மற்றும் 3 க்கு தீர்வு காண்கிறது.

**<u>பிரச்சனை எண்.4 கான தீர்வு:</u>**

24. பிரச்சனை எண்.1 தீர்வின் அடிப்படையில், இடைநிலை மனு எண்.2/2024 மனு அனுமதிக்கப்பட்டு, மனுவின் ஆவணங்கள் இம்மேல்முறையீட்டில் மே.மு.சா.ஆ.1 முதல் மே.மு.சா.ஆ.7 ஆக ஏற்க உத்தரவிடப்பட்டு, அவ்வாறே இந்நீதிமன்றம் பிரச்சனை எண்.4 க்கு தீர்வு காண்கிறது.

**<u>பிரச்சனை எண்.5 கான தீர்வு:</u>**

25. பிரச்சனை எண்கள். 2. 3 தீர்வுகளின் அடிப்படையில் இம்மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கத்தக்கதல்ல என பிரச்சனை எண்.5 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக,**

1. இ.ம.எண்.2/2024 மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. இ.ம.எண்.2/2024 ல் கண்ட ஆவணங்கள் இம்மேல்முறையீட்டில் 1 முதல் 7 சான்றாவணங்களாக ஏற்க உத்தரவிடப்படுகிறது.

2. இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. ஆண்டிபட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண். 178/2011 வழக்கில் கடந்த 16.08.2019 ம் தேதியன்று பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

4. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 17 ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

GEETHA Digitally signed by GEETHA Date: 2026.08.07 18:18:31 +0530

சார்பு நீதிபதி,
தேனி.

மேல்முறையீட்டாளர் தரப்பு கூடுதல் சாட்சி :– – இல்லை
மேல்முறையீட்டாளர் தரப்பு சான்றாவணங்கள் :–

| | | |
|---|---|---|
| மே.மு.சா.ஆ.1 | 27.02.1991 | பேபி ராஜம்மாள் பெயரில் உள்ள பெட்டிக்கடை லைசன்ஸ் கட்டண ரசீது – அசல். |
| மே.மு.சா.ஆ.2 | 17.08.1996 | வாக்காளர் பதிவு அதிகாரி நோட்டீஸ் – அசல். |
| மே.மு.சா.ஆ.3 | 21.07.2010 | தேசிய ஊரக வேலைவாய்ப்பு அட்டை – அசல். |
| மே.மு.சா.ஆ.4 | – | பேபி ராஜம்மாள் பென்சன் பெற்று வருவதற்கான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பாஸ் புத்தகம் – நகல். |
| மே.மு.சா.ஆ.5 | 14.10.2014 | பேபி ராஜம்மாள் தன் கணவர் ராமசாமி பெயரில் செலுத்திய வீட்டு வரி ரசீது – அசல். |
| மே.மு.சா.ஆ.6 | – | 1ம் எதிர்மனுதாரர் சந்திரா ஆதார் அட்டை – சான்றிட்ட நகல். |
| மே.மு.சா.ஆ.7 | 30.12.2016 | 2ம் எதிர்மனுதாரர் மகேஸ்வரி பள்ளி மாற்றுச் சான்றிதழ் – நகல். |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு கூடுதல் சாட்சி :–</u> – இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு கூடுதல் சான்றாவணம் :–</u> – இல்லை

GEETHA Digitally signed by GEETHA Date: 2026.08.07 18:18:41 +0530

சார்பு நீதிபதி,
தேனி.

**<u>நகல்</u>**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆண்டிபட்டி.